ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 8.4 – விண்ணவர் தங்கள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8.4 – விண்ணவர் தங்கள்

‡ விண்ணவர் தங்கள் பெருமான் ⋆
திருமார்வன் ⋆
மண்ணவர் எல்லாம் வணங்கும் ⋆
மலி புகழ் சேர் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
கதிர் முடி மேல் ⋆
வண்ண நறுந்துழாய் ⋆
வந்தூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.1** ‖

வேத முதல்வன் ⋆
விளங்கு புரி நூலன் ⋆
பாதம் பரவிப் ⋆
பலரும் பணிந்தேத்தி ⋆
காதன்மை செய்யும் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
தாது நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.2** ‖

விண்ட மலர் எல்லாம் ⋆
ஊதி நீ என் பெறுதி ⋆
அண்ட முதல்வன் ⋆
அமரர்கள் எல்லாரும் ⋆
கண்டு வணங்கும் ⋆

கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
வண்டு நறுந்துழாய் ⋆
வந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.3** ॥

நீர் மலிகின்றதோர் ⋆
மீன் ஆய் ஓர் ஆமையும் ஆய் ⋆
சீர் மலிகின்றதோர் ⋆
சிங்க உருவாகி ⋆
கார் மலி வண்ணன் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
தார் மலி தண் துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.4** ॥

ஏர் ஆர் மலர் எல்லாம் ⋆
ஊதி நீ என் பெறுதி ⋆
பார் ஆர் உலகம் ⋆
பரவப் பெருங்கடலுள் ⋆
கார் ஆமை ஆன ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
தார் ஆர் நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.5** ॥

மார்வில் திருவன் ⋆
வலன் ஏந்து சக்கரத்தன் ⋆
பாரைப் பிளந்த ⋆
பரமன் பரஞ்சோதி ⋆
காரில் திகழ் ⋆
காயா வண்ணன் கதிர் முடி மேல் ⋆

தாரில் நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.6** ॥

வாமனன் கற்கி ⋆
மதுசூதன் மாதவன் ⋆
தார் மன்னு ⋆
தாசரதி ஆய தட மார்வன் ⋆
காமன் தன் தாதை ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் ⋆
தாம நறுந்துழாய் ⋆
தாழ்ந்தூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.7** ॥

நீல மலர்கள் ⋆
நெடு நீர் வயல் மருங்கில் ⋆
சால மலர் எல்லாம் ⋆
ஊதாதே ⋆
வாள் அரக்கர் காலன் ⋆
கண்ணபுரத்தெம் பெருமான் கதிர் முடி மேல் ⋆
கோல நறுந்துழாய் ⋆
கொண்டூதாய் கோல் தும்பீ ! ॥ **8.4.8** ॥

நந்தன் மதலை ⋆
நில மங்கை நல் துணைவன் ⋆
அந்த முதல்வன் ⋆
அமரர்கள் தம் பெருமான் ⋆
கந்தம் கமழ் ⋆
காயா வண்ணன் கதிர் முடி மேல் ⋆

கொந்து நறுந்துழாய் ⋆
கொண்டூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.9** ‖

‡ வண்டமரும் சோலை ⋆
வயல் ஆலி நல் நாடன் ⋆
கண்ட சீர் வென்றிக் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
கொண்டல் நிற வண்ணன் ⋆
கண்ணபுரத்தானை ⋆
தொண்டரோம் பாட ⋆
நினைந்தூதாய் கோல் தும்பீ ! ‖ **8.4.10** ‖

அடிவரவு — விண்ணவர் வேதம் விண்ட நீர் ஏரார் மார்வில் வாமனன் நீலம் நந்தன வண்டமரும் தந்தை

விண்ணவர் தங்கள் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்